482
The Registrar of Books,
Madras. 6.

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

| கிளை—ரு | குருகுலம், மாம்பாக்கம்; கர, ஆடி; 27—7—51. | தளிர்—சக |
|---|---|---|

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

## நல்லொழுக்கம்

'புத்திமான் பலவான்' என்று கூறுதலை விட 'நல்லொழுக்க முள்ளவனே பலவான்' என்று கூறுதல் மிக உயர்வாகவும் பொருத்தமாகவும் காணப்படுகிறது. அருள் இல்லாத உள்ளம், ஒழுக்கம் அமையாத அறிவு, நற்குணம் பயிலாத திறமை ஆகிய இவை தத்தம் நிலையில் உறுதி மிக்கனவாகக் கருதப்படினும் அவற்றின் உறுதி தீங்குகள் உண்டாவதற்கே துணை புரிதலை அறிகிறோம். இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சிற்சில நேரங்களில் மக்கள், தம்மை மதிக்கச் செய்து மகிழ்ச்சி அளிக்கின்றன. ஆனால் இம் மகிழ்ச்சி, கன்னமிட்டுப் பொருள் பறித்தேகும் திருடனின் துணிவையும், வழிபறிக் கொள்ளைக்காரன் குதிரை ஊர்ந்து விரைந்தோடும் சிறப்பினையும் கண்டு மகிழ்வதற்குச் சமமாகும்....................

வாய்மை, நேர்மை, நற்குணம் என்பன ஒருங்கமைந்த நிலையே நல்லொழுக்கம் எனப்படும். இத்தகைய நல்லொழுக்கம் வாய்க்கப்பெற்றவன், நற்செயல்களை உவந்தாற்றும் திறமை, தீமைகளை உடைத்தெறியும் நெஞ்சுரம், துன்பங்களைப் பொறுக்கும் திண்மை ஆகிய பண்புகள் எளிதில் வாய்க்கப்பெறுகிறான்....................

பகற்போதின் ஒளி, வீட்டுக் கூரையின் சிறிய ஓட்டையின் வழியாகக் காணப்படுதல் போல ஒருவன் மேற்கொள்ளும் சிறிய செயல்களும் அவன் ஒழுக்கம் இன்னதெனக் காட்டுகின்றன.

(சி. து. க.) —Samuel Smiles' Self-Help.

# - அறிவியல் -

(பா. வரதராசன்)

ஒரு பிரபல தமிழ்த் திங்களிதழ். அதில் ஓர் அன்பர் கீழ்வருமாறு வினவுகிறார். "உடலை விட்டு நீங்கிய உயிர் என்ன நிலை அடைகிறது? "புராணக் கருத்துக்களின்படி நரக லோகம் அல்லது சுவர்க்கலோகம் செல்கிறதா? அப்படியாயின் அந்த உலகங்கள் எங்கே இருக்கின்றன?"

இதற்கு உள நூலாசிரியர் ஒருவர் (M. A; M. Litt.) இறக்கும் விடை :—

"உடலும் உயிரும் ஒன்றே. உயிர் என்று கூறப்படுவது உடலின் எல்லா உறுப்புக்களும் சிறந்து வலிவுடன் வேலைசெய்யும் வரையில் இருக்கிறது..........

"விஞ்ஞான முன்னேற்றமடையாத காலத்துத் தங்களது கற்பனை கொண்டு அறிஞர்கள் சில உலகங்களைச் சிருட்டித்தார்கள். அவைகள் நரகலோகம் சுவர்க்கலோகம் போன்றவைகள். அவர்கள் வாழ்ந்த காலத்து மக்கள் சிறந்த சமுதாய வாழ்வு வாழச் சட்ட திட்டங்கள் வரையறுத்தார்கள். நன்னெறிகளையும் வற்படுத்தினார்கள். இவைகளைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்களுக்கும் ஒழுகாதவர்களுக்கும் வித்தியாசப்படுத்த வேண்டுமல்லவா? இல்லாவிடில் சட்ட திட்டங்களையும் நன்னெறிகளையும் எவர் மதிப்பர்? எனவே ஒழுக்கமுடன் வாழ்பவன் சமூக வாழ்விற்கு உதவுகின்றான். ஆகையால் அதற்குப் பலன் உயிர் நீத்த உடன் 'இன்ப புரியை' அடைவான் என்றும் ஒழுக்கம் தவறி வாழ்பவன் 'துன்ப புரியை' அடைவான் என்றும் பண்டைக் காலத்தே மக்கள் கருதலாயினர். ஆனால் தம் காலத்திலோ விஞ்ஞானிகள் உடலும் உயிரும் ஒன்றே என்று கூறுவதோடல்லாமல் அண்ட கோளத்திலே பல கோடி உலகங்கள் இருக்கின்றன என்றும் கூறுகிறார்கள். எனவே உடலை விட்டு உயிர் நீங்கி வேறு உலகங்களில் சஞ்சரிக்கின்றது என் பதில் தற்போதைய விஞ்ஞான உண்மைகளைக் கொண்டு நோக்கினல் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை."

இது போன்ற வினக்கள் நமக்குப் புதியன அல்ல. அன்றியும் இது போன்ற பதில்களும் புதியன அல்ல. இவை, தமிழர் நாகரிகமாக வாழத் தலைப்பட்ட அந்த மிகப் பழைய நாட்களிலிருந்தே எழுந்தவை. அறிவின் திண்மையுடன் நாகரிகத்தின் உச்ச நிலையில் திகழ்ந்த நம் பண்டைய ஆன்றோர்கள் இத்தகைய ஐயங்களுக்கு வாழ்க்கையின் பல துறைகளிலிருந்தும் ஆராய்ந்து அனுபவ முதிர்ச்சியாலும் ஆன்ம மெய் யறிவைக்கொண்டும் விடையிறுத்துள்ளனர்.

உயிர் வேறு உடல் வேறு என்பன சிவஞான சித்தியார் மூன்றாஞ் சூத்திரம் பசு உண்மை என்னும் தலைப்பில் கீழ்க் கண்ட விருத்தங்களில் தர்க்க ரீதியில் தெளிவிக்கப்பட்டுள்ளன. 'ஆன்மா உடம்பலவாக நிறைந்து நிற்கு' மென்ற—கருவிகொண் டாராயும் இக்கால விஞ்ஞானிகளது கோட்பாடு, நம்மவர்க்குப் புதிதல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இதே கோட்பாட்டைச்சமணர்கள் யாதொரு கருவி யாராய்ச்சியு மின்றி வலியுறுத்தி வந்தார்கள். இவற்றையும் இன்னும் இன்னோ ரன்ன மெய்சேரா உரைகளையும் உடைத்தெறிந்து வாதித்துள்ளார்கள் நம் முன்னோர்கள்.

இது, பழைமையில் பற்றுக் கொண்டு, முன்னேற்ற நோக்கல்லாது கூறப்படுவதன்று.

இன்றைக்கு விஞ்ஞானம் அடைந்துள்ள முன்னேற்றம் விரும்பிப் போற்றப்படுவதுதான். நம், அன்றாட வாழ்க்கையை வளம்பெற நடத்த அது புரிந்துவரும் சேவையை மறக்க முடியாது. ஆயினும் விஞ்ஞானிகளின் தத்துவங்களெல்லாமே உண்மை என்றோ அன்றி அவைகள் எக்காலத்துக்கும் ஒவ்வுவன வென்றோ கொள்ளக் கூடவில்லை. பருப் பொருள்களைப் பற்றிய சித்தாந்தங்கள் மட்டும் சில காலத்திற்கோ அன்றிச் சில நூற்றாண்டுகளுக்கோ உண்மை எனக் கருத வாய்ப்புள்ளன.

அறிவியல் (விஞ்ஞானம்) புறப் பொருள்களைக் கருவியாகவும், வாயிலாதவும் கொண்டு ஆராயப்படுவது. ஆராயும் அறிவும் மனித அறிவு. ஆராய்ச்சி ஒரு குறித்த காலத்தே, ஒருவித சூழ் நிலையிலிருந்து ஆற்றப் படுவது.

இவைகளில் பொருளோ, ஒரே தன்மையதாய் அல்லாமல் காலந்தோறும் மாறும் இயல்புடையது. முடிவில் அழியும் பாங்குடையது. இவற்றின் அடிப்படையில் இவற்றைக் கருவியாகக் கொண்டு நிகழும் ஆராய்ச்சியால் பெறும் முடிபு, அப்பொருள் சம்பந்தப்பட்ட மட்டில் உண்மையாக இருக்கலாம். பின்னும் இதை ஆராயும் மனித அறிவோ,

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

## —N. K. M.—

## தங்க நாடா

( பதிவு )

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

# நற்றிணை ‘அழகு’

## விருந்தோம்பல்

[R. G. பிள்ளை, B. A.]

விருந்தோம்பலைப் பற்றி ‘முல்லைக் கொடி’யின் இரண்டிதழ்களில், ‘பசியிலும் பண்பு’ என்ற தலைப்பின் கீழ் ஒன்றும், ‘பிறர்க்கு உதவுதல்’ என்ற தலைப்பின் கீழ் மற்றொன்றுமாக இரண்டு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அக் கட்டுரைகளை எழுதியவர் குருகுல மாணவர் முத்துசாமி அவர்கள் ஆவார். அவர், தம் கட்டுரைகளில், அரிய கருத்துக்களை எளிய நடையில் பற்பல மேற்கோள்களுடன் விளக்கியுள்ளார். அத்தகைய ஆராய்ச்சித் துறையில் ஈடுபடும் மாணவரை ஊக்குதல் என் போன்ற முதியோர்களின் கடமையாகும். விருந்தோம்பலைக் குறித்து நற்றிணையில் காணப்படும் இரண்டொரு குறிப்புக்களை விளக்குவதன் மூலம் அவ் வெழுத்தாளரை ஊக்குவதுடன் என் கடமையையும் ஒருவாறு நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். அவ் வெண்ணத்தின் விளைவே இக் கட்டுரையாகும்.

விருந்தோம்பல் இல்வாழ்பவர்க்கே உரிய அறமென்றும், அதனைக் கணவனும் மனைவியும் ஒருங்கு சேர்ந்திருந்தே இயற்றல் வேண்டும் என்றும் அக் கட்டுரையாளர் கூறியது முழுதும் உண்மையேயாம். விருந்தோம்புவதற்கு, ஆடவரை விட மகளிரே மிகத் தகுதி வாய்ந்தவர். இராமனைப் பிரிந்து இலங்கையில் வருந்துகின்ற சீதை, விருந்து கண்டபோது இராமன் என்னுறுமோ வென்று விம்முவாளானால், விருந்தோம்பற்கு மகளிர் எத்துணை இன்றியமையாதவர் என்பது நன்கு புலப்படும்.

பரத்தையிற் பிரிந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தணிக்கப் பெறானாய், விருந்தொடு தலைவியின் இல்லத்திற் புகுந்தான். அவ் வில்லத்தைப் பின்வரும் நற்றிணைச் செய்யுளைப் பாடிய மாங்குடிகிழார் வருணிக்கிறார்.

“தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேழை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகிற் றலையிற் றுடையினள் நப்புலந்
தட்டி லோளே யம்மா அரிவை
யெமக்கே, வருகதில் விருந்தே சிவப்பா னன்று
சிறியமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே.”

யாவருங் காணத்தக்க நல்லில்லென்று அவ் வீட்டை ஆசிரியர் சிறப்பித்தார். வீட்டின் முற்றத்திலுள்ள ஒவ்வொரு தூணிலும் ஓர் எருமைக் கன்று பிணிக்கப்பட்டிருக்கிறது. எருமையின் ‘மடநடைக் குழவி’ என்றமையால் கன்றுகள் இளமை வாய்ந்தன வென்றும் அவற்றின் தாயினம் கறவை எருமைகள் என்றும் காட்டினார்.

முற்றத்தை விட்டு வீட்டின் உட்புறஞ் சென்றால், வளையங்கள் பூட்டிய, கையினாற் செய்த, பேழை காணப்படுகின்றது. ‘செழுஞ்செய் பேழை’ என்றமையால் அது காலிப் பெட்டியன்றென்பதும், விலையுயர் பொருள்களைக் கொண்ட செழுமை வாய்ந்ததென்பதும் பெறப்பட்டது. இக் காலத்தில் இரும்புப் பெட்டி (Iron Safe) அமைக்கப் பெற்ற வீடே செல்வத்தாற் சிறந்ததெனக் கருதப்படுகிறது. கடைச் சங்க காலத்திலும் தமிழர், தம் இல்லங்களில், மரத்தாலோ அல்லது உலோகங்களாலோ செய்யப்பட்ட பேழைகளில் விலையுயர் பொருள்களைச் சேமித்து வைத்தார்களெனத் தெரிகிறது.

ஒவ்வோர் வீட்டின் புறக்கடையிலும் வாழைத் தோட்டம் இருந்திருக்க வேண்டும். கறவை எருமைகள் பல, விலையுயர் பொருள்களைக் கொண்ட பேழை, வாழைத் தோட்டம், மருத நிலத்திற்குரிய வகை வகையான உணவுத் தானியங்கள், இவையெலாம் சேர்ந்து தமிழர் இல்லங்களை அக் காலத்தில் செழுமையாக்கின.

வளங்கள் யாவும் நிறைந்திருப்பினும் மடக் கொடியில்லா மனை பாழாகும். இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை. ஈண்டுக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

—புறநானூறு.



| கிளை 3 | கர, ஆடி, 27-7-51 வெள்ளி | தளிர் 41 |
|---|---|---|



# தொழில்கள்

வாழ்வுக்கு இன்றியமையாதவை தொழில்கள். கல்வியின் நோக்கமும் அதன் முதற் பகுதியும் மனப் பழக்கத்துக்கு உரியனவா யிருந்தாலும், அப் பழக்கத்தையும் தொழிலின் வாயிலாகப் பயிற்றுதல் மாட்சிமைப் படும். 'ஆதாரக் கல்வி' என்னும் அடிப்படைக் கல்வி முறையில் இவ் வுண்மை தெளிவாகின்றது.

வாழ்க்கைச் செலவுக்குத் தேவையான பொருளை ஒவ்வொருவரும் தொழிலின் வாயிலாகப் பெறுதலே முறை.

பிறரிடம் போய் இது தேவை என்று இரத்தல் வாழ்க்கையில் இழிவானது. அதனினும் இழிவானது, பொதுச் செயல் என்னும் போர்வை போர்த்துக் கரவு முறையில் இரந்து வாழ்க்கை நடத்துதல்.

"ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்"

என்று நம் குருதேவர் திருவள்ளுவர் இக் கரவு செயலை அழுத்தமாகக் கண்டித்திருக்கின்றார். அவரவரே முயன்று நீர் கொண்டுவந்து ஆவிற்குக் காட்ட வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து.

நற்செயல் எதுவும் இவ்வாறு அவரவர் முயற்சியினால் நடைபெறுவதே நேர்மையானது. எதாவது ஒரு தொழிலை மேற்கொண்டு, நேர்மையாய் முயன்று பொருள் தேடி, அதனில் உரிய பகுதியைப் பலர்க்கும் பயன் தரும் நற் செயலுக்கென ஒதுக்கி அது செய்தல் நன்று. உடையவர்கள் அவ்வாறு செய்ய வேண்டிய கடமைகள் எவ்வளவோ உள்ளன. நாட்டின் வளர்ச்சிக்கு அவை போல்வன மிகவுந் தேவை.

ஆனால், பிறர் தேட்டத்தைக் கொண்டு வேறொருவர் அவற்றைச் செய்தல் அற மாகாது. அவரவர்க்கும் இன்னவை கடமை என்று அறிவிக்கலாம். அவரவரையே செய்யும்படி ஊக்கலாம். தெளிவு வரப் பாடு படலாம். செய்வார் செயல் கண்டு, அச் செயலுக்கோ அவர்க்கோ அன்பினால் பிறர் தாமே விரும்பிச் செய்யும் உதவிகளையோ பரிசுகளையோ அவர் அன்பின் மேன்மையை மதிக்கும் அறிகுறியாக ஏற்றுக் கொள்ளுதலில் இழுக்கில்லை. இத்தகைய அன்பளிப்புகள் 'ஒப்புரவு' என்று ஆசிரியர் பெருமானாற் பாராட்டப் பெற்றுள்ளது. ஆனால் இது நற்செயல் நேர்வாய் இருக்க வேண்டுமே யல்லது இதனைக் குறியாகக் கொள்ளுதல் நேர்மை யாகாது.

ஆகலால், பொருளை விரும்புவோர் அதனை ஒரு தொழிலின் வாயிலாகத் தேட முயல்வதே ஏற்றது.

வாழ்க்கைக்குத் தேவை, அளவான தூய உணவு உடை நிழல்; இவை புறக் கருவிகள். இவற்றைத் தேடுதல் 'தொழில்' எனப்பட்டது. தொழிலைச் 'செய்த் தொழில்' என்றும் 'கைத் தொழில்' என்றும் நம் முன்னோர் வகைப்படுத்திக் கொண்டனர். 'செய்த்தொழில்' என்றது, உழவு தொழில்; 'கைத்தொழில்' என்றது, அதனையும் ஏனை உடை நிழல் என்பவற்றையும் நிறைவேற்றிக்கொள்ளுதற்குரிய துணைத் தொழில்.

இனி, வாழ்வது என்பது, அருள் வல்லமையில் உயர்தலும், அவ் வல்லமையில் பிறரும் உயர முயலுதலுமாம். வாழ்வதன் பிரிவுகளாகிய இவ் விரண்டையும் முறையே 'அருள் திறமை' என்றும், 'பணித் திறமை' என்றும் சான்றோர் கருதினர்.

வாழ்வது என்னும் இவ் வுயர் நிலைக்குச் சில மொழித்திறனும் பல கலைப் பண்புகளும் துணை புரியும். மொழிக்குத் தாய் மொழிப் புலமையும், கலைக்கு அழகு கலைகளும் அடிப்படையானவை. இவை, பகுத்தறிவு என்னும் மனத்தைப் பண்படுத்தி நாகரிகம் என்னும் உயிரறிவின் செயல்களை ஒழுங்காக்கி அருள் வல்லமையில் உயர்த்த, அவ் வல்லமையில் மக்கள் வாழ்வதே வாழ்வென்பது.

ஆகவே, 'தொழில்' புறக் கருவிகளுக்குரியது; 'மொழி'யும் 'கலை'யும் அகக் கருவிகளுக்குரியன; 'அரு'ளும் 'பணி'யும் இவை கொண்டு வாழும் வாழ்வுக்குரியன என்று நன்கு தெளிந்து கொள்ளப்பெறும்.

மனிதராய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் இந்த ஐவகை வாழ்வியல் திறமைகளிலும் சிறந்து விளங்குதல் முதன்மையாகும். மக்கள் இந் நலங்களைப் பெற்றுச் சிறக்க வேண்டுமென்பதே குருகுலத்தின் நோக்கமும் முயற்சியும்!

இவ்வளவும் கருதிப் பார்ப்பதிலிருந்து, அடிப்படையில் ஒவ்

வொருவரும் பொருளுக்குத் தொழில் பயில்வதன் முதன்மை நன்கு விளக்கமாகும். வாழ்வின் நேர்மை இங்கிருந்தே தொடங்குகின்றது.

இனி, நாட்டில் வளரும் தொழிற் பெருக்கத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டும். தொழில்கள் கணக்கின்றிப் பல்குதல் மட்டும் தொழிற் பெருக்க மாகாது. அதைவிட, அவற்றைப் பயில்வோர் எண்ணிக்கை பல்குதலே சிறந்தது.

எந்தத் தொழிலாவது செய்து பிழைத்துக் கொள்வோம் என்னும் குருட்டு நெறி, நாட்டில் தேவையைப் பெருக்கிக் குழப்பத்திலும் வறுமையிலும் கொண்டுபோய் விடும். தேவையற்ற தொழில்களை யெல்லாம் பெருக்கி நாடு இந் நூற்றாண்டில் பெரிதும் சீர் குலைந்துள்ளது.

எடுத்துக் காட்டாக, அணுக் குண்டுத் தொழில் தேவையற்றது; பேரளவில் உலக அழிவையும் உண்டாக்குவது. புகைக்குடிப் பொருள்களும் இத்தகையனவே.

பல்வேறு வகையான செயற்கை வேடிக்கைப் பொருள்கள் ஒரு வீண் வேலை. விரைவில் அழிந்து அடிக்கடி பொருட் செலவைப் பெருக்குவன.

பட்டாடைகள் கட்டாய மில்லாதவை. செயற்கைப் பட்டும் அளவாயிருக்கலாம்.

அயல் நாட்டு மக்களைப் பார்த்துத் தொத்திக்கொண்ட வீணை தொழில்கள் பல; இந் நாட்டுத் தட்ப வெட்பத்துக்கும் அக நாகரிகங்களுக்கும் ஏலாதன அவற்றில் பல. அவர்கள் மேற்கொள்ளும் சில ஆடை முறைகள், பூசு பொருள்கள், புழங்கு கலன்கள் போல்வன இந் நாட்டுக்குத் தேவையற்றவை.

பல்வேறு வகையாக நாடு தேவைகளைப் பெருக்கிக் கொண்டு சீரழிகின்றது. இயற்கை யன்னையின் எழில் இல்லங்களான கிராமங்கள் பாழாகின்றன.

கலைப் பண்பு பெருகுதற்குரிய சித்திரத் தொழில்கள் வேண்டுமென்றால், நிலத்திலிருந்து பல்வேறு வகையான பன்னிறச் செடி கொடி மரங்களை வளர்த்து அழகுணர்வு கொள்ளலாம்; பயன் பொருள்களும் பெறலாம்.

வறுமை தீர்ந்து உளப் பண்புகளும் உயர்வதற்கு நிலத்தைப் பண்படுத்துந் தொழிலைவிட உதவியாவது வேறொன்று மில்லை. இயற்கை எழில் குலுங்குஞ் சித்திரக் கூட மென்றே அதனைக் கூறலாம். எளிய இனிய வாழ்வுக்குரிய ஆக்க நிலையம் அது.

“இலமென்று அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்”

என்னும் குருதேவர் அருள் மொழியை நாடு புறக்கணித்தால் வேறு உய்வு நிலையே இல்லை என்பது உறுதி.

அதனாலேதான் ‘தொழில்’ என்பது ‘உழவு’ ஒன்றே என்று அப் பெருமான் தமது பெருமறை நூலில் ஒன்றாக எடுத்துக் காட்டினார். ஏனைக் கைத்தொழில்களெல்லாம் துணைத் தொழில்களாக அதாவது, குடிசைத் தொழில்களாகக் கருதப் பெற்றன.

பெருந் தொழிலாகிய உழவு தொழிலுக்குரிய இடத்தில் இப்பொழுது ஆலைத் தொழில்கள் பெருமிதங் கொண்டு நிற்கின்றன. இயற்கைச் சித்திரத் தொழிலாகிய உழவு தொழில் குறைவடைகின்றது.

தொழில்களை அளவும் தேவையும் அறிந்து, வாழ்வின் குறிக்கோளுக்குரிய நெறியில் இயற்கை இசைவில் ஒழுங்குபடுத்திக் கையாண்டு வருங் காலந்தான் நாடு உய்வுறுங் காலம்!

## முருகவேள் திருமுறைகள்

முதல் பகுதி வெளிவந்தபின், மேலும் பெயர்ப் பதிவுகள் சேர்ந்து வருகின்றன. குறித்த அளவு சேர்ந்தபின், வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரும்.

இத் திருமுறைகள் பகுதி பகுதியாக வெளிவருதலை விட, தொகுதி தொகுதியாக அட்டைக் கட்டுச் செய்து வெளிவருதல் கையாளுதற்குத் தகுதியாயிருக்கும் என்றும், அஞ்சலில் வருவிப்பதற்கும் செலவு குறையும் என்றும் சிலர் கருத்து அறிவிக்கின்றனர். அவ்வாறே செய்ய வெளியிடுவோர் இசைந்துள்ளனர்.

நான்கு பகுதிகள் சேர்ந்த தொகுதி ஒன்று (400 பக்கங்கள்) ரூபா 5-0-0 விலையாகும். வாங்குவோர்க்குக் கட்டுச் செய்யும் தனிச் செலவு அப்போது இல்லை. நான்கு திங்களில் நடைபெறும் பணி, இரண்டு திங்களில் நிறைவேறும். பல வெளியீடுகள் இங்ஙனம் தொடர்ந்து விரைவில் வெளிவருதற்கும் வாய்ப்பாயிருக்கும்.

ஆதலால், முருகவேள் திருமுறை அன்பர்கள், தொகுதியாகவே இனிப்பெற்றுக்கொள்ளலாம். விரும்பும் அன்பர்கள் அதற்குரிய விலை ரூபா ஐந்தை முன்னால் அனுப்பி ஒவ்வொரு தொகுதியையும் பெற்றுக் கொள்வார்களாக!

வாங்குவோர் எண்ணிக்கை போதியது அமைந்தால் ஆவணித் திங்களிலேயே முதல் தொகுதியை வெளியிடலாம்.

—குருகுலத்தார்.

# கனியாத காய்

[அ. தீ. வீரராகவன்]

அதில் அத்தலைவியை அமர்த்தித் தலைவன் ஆட்டுவான். அவள் நீளச் சென்று மீள வருவாள். ஒரு நாள் தலைவியை வழக்கமாகச் சந்திக்குமிடத்திற்கு வருகிறான் தலைவன். ஆனால் தலைவி அங்குக் காணப் படவில்லை. அதற்குப் பதிலாகத் தோழி அங்கு நின்று கொண்டிருக்கிறாள். அவள் தான் அவனுக்குத் தலைவி அங்கு வாராததன் காரணத்தை விளக்குகிறாள்.

ஐயனே! பெரிய புனத்திலுள்ள சிறிய தினைக் கதிர்களைக் கவர்ந்து செல்லுகின்ற சிறிய கிளிகளை ஓட்டி, கரிய அடியையுடைய வேங்கை மரத்திலே தொடுத்த கயிற்றூஞ்சலில் எறி உம்முடனே ஆடி, அருவியி லாடி விளையாடுவதிலும் இனிமையைத் தருவது வேறு ஏதேனும் உண்டோ?

ஆயினும் அதனால் செறிந்து, கருமை மிகுந்த, கூந்தலில் எமக்சேற்பட்ட நறுமணம் கமழ்தலைக் கொண்ட நல்ல புது நாற்றம், பசலை பரவிய சிறிய நெற்றி முதலிய வேறுபாடுகளைப் பார்த்து அன்னை வெகுண்டு நின்றாள். அதை யஞ்சி நாங்கள் மனையிலேயே காவல் வைக்கப்பட்டோம் என்றவாறு தலைவியின் நிலையைத் தலைவனுக்கு விளக்குகிறாள் தோழி.

பெருபுனக் கவருஞ்
சிறுகிளி யோப்பிக்
கருங்கால் வேங்கை
யூசல் தூங்கி
.......... உம்மோடு
ஆடினம் வருதலின்
இனியதும் உண்டோ?
நெறிபடு கூழைக்
கார்முதிர் பிருந்த
வெறிகமழ் கொண்ட
நாற்றமும் சிறிய
பசலை பாய்தரு
நுதலும் நோக்கி
வறிதகு நெஞ்சினள்
பிறிதொன்று சுட்டி
வெய்ய உயர்த்தினள் யாயே
ஐய அஞ்சினம்
அளியம் யாமே
—கபிலர், நற்றிணை.

என்ற பொருள் பொதிந்த பாட்டை வைத்துக்கொண்டு, தான் படித்து இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தாள் பார்வதி. பின்னால் சிறிது நேரமாகச் சப்தம் செய்யாமல் வந்து நின்றுகொண்டிருந்த அரசைக்கூட அவள் கவனிக்க வில்லை. அவனும் அப் பாட்டைப் படித்தான்.

முதன் முதல் அரசுதான் பேச்சை யாரம்பித்தான்.

இப் பாட்டில் 'கருதிய காதல்' நிறைவேறாமல் அன்னையின் பிரவேசத்தால் நின்று விடுகின்றதே, அதைப் போல்...........

திரும்பிய பார்வதி அரசு வந்து நின்றிருப்பதைப் பார்த்து நாணம் கொண்டாள். தன்னையு மறியாமல் அவள் பதில் கூறலானாள்.

ஒன்றும் ஆகாது... மேலும் அப்பாவும் அம்மாவும் நம் விருப்பத்தைத் தான் கொண்டுள்ளனர். ஆகையால்,

பக்கத் தறையிலிருந்து கொண்டு இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த தனபால் 'நானுந் தான் உங்களுக்குள்ள 'ஒற்றுமை' கண்டு இதுவரை உங்களுக்கு மணம் முடித்து வைத்து விடலாம். இதைப் போன்ற பையன் எங்கும் கிடைக்க மாட்டான் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் தற்போது தடை வந்து விட்டது போல் இருக்கிறது.

ஆம்! தடைதான்; பெரிய தடை தான்.

தடை, ஒரு பெண்ணை நற்குணமுடைய ஆடவன் மணக்க விரும்புவது தடை. இருவர் மனமும் ஒன்றாக ஒன்றி இருப்பது தடை. ஒரு மரம் பெரியதாக வளரும் வரை வளரவிட்டு, அது பல கிளைகளுடன் முனைத்து இன்பத்தில் திளைத்திருக்கும்போது திடீரென அதனடியில் கோடாலியால் வெட்டி அதை வீழ்த்துவது போல, எங்களைப் பல நாள் பச்சைக் கிளிகளாக, ஒருவருக்கொருவர் இச்சை கொண்ட கிளிகளாக, 'ஒற்றுமை'யும் அன்பும் ஒருங்கே அமைந்த கிளிகளாக, தம் இச்சைப்படி வான வெளியில் பறந்து சென்று விளையாடும் சுதந்திரக் கிளிகளாகப் பறக்க விட்டீர்—மரத்தைச் சொந்தக்காரன் தன் பாட்டில் வளர விடுதலைப் போல. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைதல் போல, ஒருவன் நற்காற்று வாங்கலா மென்று நந்தவனம் செல்ல, அங்கு வந்த ஒரு நல்ல பாம்பினால் தீண்டப்பட்டு அவன் திடீரென இறப்பது போல, தன் தோட்டத்தின் ஒரே செடியில்—மாதுளஞ் செடியில் ஒரே ஒரு பழம் காய்த்துப் பழுத்து அழகாக விளங்கி யிருக்க அதைப் பார்த்த உடையவன் காலையில் வந்து அதைப் பறித்துத் தம் காதலிக்குத் தரலாம் என்று எண்ணிப்போக, அதை அவ் விருளில் ஒரு கள்வன் கவர்ந்துகொண்டதைப் போலக் கடைசியில் மரத்தை அடியில் வெட்டி வீழ்த்துவது போல, என் நெஞ்சை உம்முடைய சுடுசொல் என்னும் கோடாலியால் பிளக்கின்றீர். உனக்குப் பார்வதியைக் கொடுப்பதாகத்தான் நினைத்திருந்தேன். ஆனால் தற்போது தரமுடியாது என்று கூறுகின்றீர்! அதற்கு ஏதோ 'பொங்கிவரும் தண்ணீருக்கு மடை கட்டுவதுபோல்' எங்கள் மணத்திற்குத் தடை யிருக்கிறது என்று தடுமாற்றப் பேச்சு பேசுகின்றீர், அதற்கான காரணங்கள் ஏதேதோ கூறுவேன் என்று கூறுகின்றீர்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

[2 ம் பக்கம் தொடர்ச்சி]

பூரணமற்றது. அறிவு அனுபவப்படுந்தோறும் விரிகின்றதென்பதை யார் மறுக்கக்கூடும்? அது பெறும் அனுபவமும் சம்பந்தப்படும் பொருளைப் பற்றி, அதன் அனுபவத்தால் பெறுவதாகும். எனவே இவ் வறிவின் பாதையும் பொருள் மாறி உணர்த்திச் சென்ற வழியே செல்வதாகும்.

இதிலிருந்து நாம் சில உண்மைகளைச் சிந்தித்தறியலாம். புறப்பொருள்களைப் பற்பல கோணங்களினின்றும் ஆராய்ந்து அவைகளை வாழ்க்கைக்குச் செம்மையாகப் பயன்படச் செய்துகொண்டு வளமாக வாழ விஞ்ஞானம் பெரிதும் பயன்படலாம். ஆயினும் இவையெல்லாம் நிலையற்ற பொருள்களின் அடிப்படையில் நிகழ்வன என்பதை நினைவிலிருத்த வேண்டும். அப் பொருள்கள் மாறின வழியே, அழிந்த வழியே அவைகளும் மாறி அழிவனவாகும். இன்றைய விஞ்ஞானியின் ஒரு சித்தாந்தம் சில நூற்றாண்டுகள் கழித்துப் பொய்த்துப் போகலாம். புறவாழ்க்கையை வளமாக மேற்கொள்ளுவதற்கு முயலுவது சாலவும் சிறந்தது. ஆனால் இத்தகைய வாழ்க்கையால் நாம் இன்பமாகவும் அமைதியாகவும் வாழலாம் என்று எண்ணினால் அது மிகத் தவறானதாகும்.

ஒரு மனிதனின் இத்தகைய வாழ்க்கைக்கும், விலங்குகள் வாழும் வாழ்க்கைக்கும் அதிக வேறுபாடு காண முடியாது. நாம், வாழ்க்கைக்கு உகந்தவைகளைத் தேடச் செயல் கொள்ளும் வகையிலும் அதற்கு நாம் செலவிடும் அறிவுத் திறமுமே விலங்குகளுக்கும் நமக்குமுள்ள ஒரு பெரிய வேறுபாடாகும். அதாவது நாம் சிறப்பாகப் பெற்ற மனம் என்னும் கருவியை, வாழ்க்கைக்கு வேண்டிய உணவு முதலிய வசதிகளில் செம்மையாகவும் திறனாகவும் ஈடுபடுத்துகின்றோமன்றிப் பிறிதொரு வேறுபாடில்லை. ஆனால் விலங்குகளோ மனமென்னும் கருவி இல்லாமலே இவைகளைத் தேடிக்கொள்ளுகின்றன.

ஆகவே மனிதன்—மனம் என்னும் அகக் கருவியைப் பெற்ற மனிதன் அக் கருவியைப் பெரிதும் புறத்தே பயன்படுத்துகின்றான். அவ்வாறன்றி அகத்தே பொருந்திய அம்மனத்தைப் பெரிதும் அகத்தே பயன் படுத்துவது தான் இயற்கை.

இத்தகைய இயற்கை நெறியில் ஈடுபட்டோர் நம் பண்டைய தமிழ் முன்னோர். எனவே பெறுதற்கரிய அக் கருவியால், பெறுதற்கரிய பல உண்மைகளைப் பலகாலும் அனுபவப்பட்டுக் கண்டு தெளிந்தார்கள்.

மேற்கோளாகத் திருவள்ளுவரை நோக்குங்கள். அவர், எத்தனை அடுக்கு மாடிகள் கொண்ட கல்லூரியில் பயின்றிருப்பாரென்று எண்ணிப் பாருங்கள்! எத்தகைய வசதிகள் கொண்ட ஊர்திகளில் ஏறி அப் பயிலுமிடங்களுக்குச் சென்றிருப்பாரென்று ஊகித்தறியுங்கள்!

ஒரு சிறிய குடில்! அதில் ஒரு சிறு அகல் விளக்கு! உட்கார ஒரு மணை. முன்னால் சுவடி வைக்கும் மரத்தாலான ஓர் இருக்கை. சில சுவடிகள். எழுத்தாணி. ஆகா! இவ்வளவும் எத்தகைய அழியா உடலைப் பிறப்பித்தன. வள்ளுவரும், "செந்தமிழியற்கை சிவணிய நிலத்து" அவர் முன்னோரும், மனத்தைப் புறத்தே செலுத்திப்பொருளாராய்ச்சி செய்ய முற்பட்டிருந்தால் கீழ்க் குறித்த மாதிரியில் உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு போன்ற முரணான "கருத்துக்"களைத்தான் கண்டிருப்பார்கள்.

மரணத்துக்குப் பின் உயிர் வேறு உலகங்களில் சஞ்சரிப்பதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளக் கூடவில்லை. ஆனால் அண்ட கோளத்தில் பலகோடி உலகங்கள் இருக்கின்றன என்று நம்புகின்றார்கள்.

அந்தோ! இவ்வுலகத்துக்கு மிக அண்மையிலிருக்கும் ஒரு விண்மீனினின்று பல நூறு கோடி ஆண்டுகளுக்கு முன் புறப்பட்ட ஒளியையல்லவோ இன்றைய தொலை நோக்கியில் அவர்களால் காண முடிகின்றது!

# இறை வணக்கம்

( மு. குப்புசாமி )

பரிதிமதி விண்மீன்கள் படர்வெளியிற் பலகோள்கள்
கிரிகடல்சூழ் நிலமதனிற் கிளர்பொருள்கள் ஆறருவி
விரிமலர்க்கா விளைபயிர்கள் விலங்கினங்கள் புள்ளூர்வ
பரிவுடனே யிவையனைத்தும் படைத்தளிக்கும் பரம்பொருளே!

வான்சுடர்தம் ஒளியாலே வையமெலாம் இயங்கவைத்தாய்
தோன்றுவன உண்டுயிர்த்துத் தொழில்புரிந்தே அகமகிழ
வான்பொழிந்து வளிவழங்கி வைகலொறுங் கதிரவனுந்
தான்றனது கடமையினைத் தவறாமற் செயப்பணித்தாய்!

இப்படைப்பின் அற்புதத்தை எண்ணிவியந் தின்பமுற
ஒப்பில்லா நுண்ணறிவீந் துயர்மனித குலம்படைத்தாய்
அப்பாலில் என்னையுமோர் அறிவுடையனாய்ப் படைத்த
செப்பரிய கருணைக்கே செய்வனன்றி வணக்கங்கள்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

குறித்த இல்லத்தில் தலைமகள் உறைகின்றாள். போற்றா ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைமகன் விருந்தொடு தன் இல்லத்தை நோக்கிவருவதைத் தலைவி காண்கின்றாள். அவள் தன் காதலனொடு புலத்தலை விருந்து காரணமாக அடக்கிக்கொண்டு, தன் இல்லத்தின் பின்புறத்துள்ள வாழைத் தோட்டத்திற்கு விரைந்தோடி, தன் மெல்லிய விரல் சிவப்ப, ஒரு வாழையிலையை அரிந்து, அதனடி பருத்திருத்தலின் அதை வகிர்ந்து, பரிகலமமைத்து, அடிசிற் சாலையையடைந்து இன்னடிசிலாக்க முற்படுகிறாள்.

தலைமகனுடன் வந்த விருந்தை உபசரித்தற்கெழுந்த ஆர்வம் ஒருபுறந் தூண்ட, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் மீது புலவி மிகுத்தலான் உண்டாய சீற்றம் மறுபுறம் அலைப்ப, இன்னடிசில் ஆக்குகின்ற தலைமகளின் கண்கள் அடுப்பினின்றெழும் புகை படிந்து மூடின; பிறை போன்ற அவள் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின. புகை படிந்த கண்களும், நுதலிற்றோன்றிய குறு வியர்வையும், தன் னழகைச் சிதையா வண்ணம், தலைவி தன் ஆடையின் முன்றானையால் அவற்றைத் துடைத்துக் கொள்ளுகிறாள். அடிசிற் சாலையில் இவ்வாறு மெய் வருந்த உணவு சமைக்கின்ற தலைமகளைத் தலைமகன், விருந்தொடு, மறைந்து நின்று காண்கின்றான். அவன் உள்ளம் உவகையால் துடிக்கின்றது. எம்முடன் விரும்பி வாருங்கள்! வாருங்கள்! என்று விருந்தினரை அழைக்கின்றான். காரணம், விருந்தினரைக் கண்ட தன் காதலியின் கண்கள் ஒரு பொழுதும் சிவப்பதில்லை; அன்றியும் புன்னகை பூத்த அவள் முகத்தைப் பின்னுமொரு முறை காணலாம் என்று அவன் கொண்ட ஆர்வமேயாகும்.

விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாயது இன்முகம் என்று,

'மோப்பக் குழையும் MADRAS

நோக்கக் குழையும் விருந்து''

என்ற குறட் பாவிற்குப் பொருள் கூறுமிடத்துப் பரிமேலழகர் கூறியது ஈண்டு உணரற்பாலது. தலைவனொடு புலந்த தலைவி விருந்தோம்பல் காரணமாகத் தன் ஊடலையும் அடக்கிக்கொண்டு இன்முகம் காட்டினாள் என்றால், தமிழ் மங்கையர் விருந்தோம்பலிற் கொண்ட ஆர்வம் என்னே!

பரணர் பாடிய நற்றிணைச் செய்யுள் ஒன்றில் தோழியை நோக்கித் தலைமகள்,

* * *

''தண்டுறை யூரன் தண்டாப் பரத்தமை

புலவா யென்றி தோழி புலவேன்''

* * *

''என் நன்மனை நனிவிருந் தயருங்

கைதூ வின்மையின் எய்தா மாறே''

என்று கூறுவதை நாம் காண்கின்றோம "தலைவனொடு புலத்தற்கு எனக்கு நேரமில்லை. ஏனெனின், என் மனையின்கண் வருகின்ற மிக்க விருந்தினரை உபசரித்தலிற் கையொழியாமையால் அவனை யெதிர்ப்படப் பெற்றிலேன்'' என்பது பின்னிரண்டடிகளின் பொருளாகும்.

இச் குறிப்புக்களால், தமிழ் மகளிர் தங் கணவரொடு ஊடல், கூடல் களுக்கிடையேயும், விருந்தோம்பலை விரும்பி எற்றார்களெனத் தெரிகிறது.

விருந்தெனப் படுவது புதுமை. புதிதாய் வந்தவர்களை (விருந்தினரை) உபசரிப்பது தான் விருந்தோம்பல். ''உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில்'' அளிப்பதும் விருந்து (Feast) ஆயிற்று.

இக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது என் கைக்கு வந்த 'முல்லைக் கொடி'யின் இதழில், 'ஈகையின் சிறப்பு' என்ற [illegible]ன் கீழ் அறிஞர் சி. து. கன்னிசாமி அவர்கள், தீட்டிய கட்டுரையில், ''வறியார்க்கொன் றீவதே ஈகை'' என்ற திருவள்ளுவர் கருத்தை அவர் வலியுறுத்தப் புகுந்து, விருந்தி வந்தோர் அரும்பசி களைவதன் சிறப்புடன் தம் கட்டுரையை முடித்தமை கண்டு நான் மகிழ்கின்றேன். அக் கட்டுரையும் விருந்தோம்பற் கருத்தைத் தன்னுட் கொண்டு மிளிர்கின்றது.

பருவ மழையின்மை முதலிய பற்பல காரணங்களால் இன்று தமிழ் நாட்டில் வளங்குன்றி, விருந்தோம்பல் நடை முறையில் இன்றைய நிலையிலும் இயலுமோ வென நாம் ஐயுறும் பொழுது, பண்டைத் தமிழரின் புலன் நெறி வழக்காம் விருந்தோம்பலை யாவது நம் ஞாபகத்திலிருத்தி நம் பின்னவர்களுக்கு வழி காட்ட வேண்டாமா?

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

புண்ணுள்ள உடம்பை, துர்நாற்றம் எடுக்கும் உடம்பைப் புனுகு சந்தனம் முதலியவைகள் பூசி மறைக்க நினைப்பதைப் போல, ஐயா! கருத்தோடு கருத்து ஒன்றி யிருந்தால் பெற்றோர் தடுப்பினும், நிந்திப்பினும் நிர்த் தாட்சண்யமாக, அவர்களைப் பிரிந்து சென்று இன்புற வாழ்வர் அன்பு உள்ளம் கொண்டோர் என்பதை நீர் அறிந்ததில்லையா? 'பெற்றோர் தடுத்தனர், அதனால் பல இன்னல்கள் நேர்ந்தன மக்களுக்கு' என்று பல புத்தகங்களில் நீர் படித்ததில்லையா? பலர் வாழ்க்கை யனுபவங்களை விருந்து கேட்டதில்லையா?

அரசு! நீ பதட்டத்துடன் பேசுகின்றாய். நான் கூறுவதைச் சிறிது நேரம் பொறுமையுடன் கேட்டுப் பிறகு நான் கூறியது தவறா? அன்றி நீ நினைப்பது தவறா? என்பதை நீயே முடிவு கூறு. மேல் மாடிக்குப் போகலாம். என் வாழ்க்கையில் ஏற்பட்ட, சிறு புயல்தான் இதற்குக் காரணம். பார்வதி! நீயும் வா.

[தொடரும்]

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)